# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-திருவண்ணாமலை மாவட்டம்

(20.01.2016 முதல் 24.01.2016 வரை)

**கடந்த ஐந்து நாட்களில் நிலவிய வானிலை (14.01.2016 முதல் 18.01.2016)**

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 28.0-30.0°C மற்றும் 17.0-19.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 58 முதல் 95 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 3-8 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 20.01.2016 | 21.01.2016 | 22.01.2016 | 23.01.2016 | 24.01.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் | வானம் ஓரளவு தெளிவாக காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0.5 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்று வரும் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 30 | 30 | 30 | 30 | 30 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 19 | 19 | 19 | 19 | 19 |
| ஈரப்பதம் | 64-90 | 62-90 | 60-87 | 60-87 | 60-87 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
2. வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள கால்நடைகள் குளம்பு அழுகல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, உழவர்கள் 40 கிராம் மயில் துத்த பவுடரை (4 சதவிதம்) ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து குளம்பின் மீது தடவுமாறும் அல்லது குளம்பினை நனைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம் அல்லது சிங்க் ஆக்ஸை களிம்பு மற்றும் வேப்பெண்ணை கலந்து தடவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
4. வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
5. கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி,வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.
6. ஆடுகளை மேடான இடத்தில் தங்கவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம் ஈரம் மற்றும் சேற்றினால் ஏற்படும் குளம்பு அழுகல் நோயிலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நெற் பயிரில் ஆனைக் கொம்பன் ஈயைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு தையமித்தாக்சாம் 25% WG 150 கிரோம் என்ற அளவில் பயன்படுத்திக் கட்டுப்படுத்தவும்.
2. இலை கருவல் நோயைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு காப்பர் ஹைட் ராக்ஸ்சைடு 1250 கி என்ற மருந்தினை நட்ட 30 மற்றும் 45 வது நாள் தெளிக்கவும் அல்லது 20% பசுஞ்சாணம் அல்லது 5% வேப்பங்கொட்டை கரைசல் இரண்டு முறை தெளிப்பதன் மூலம் இலை கருகல் நோயின் தாக்குதலைக் குறைக்கலாம்.
3. நெற் பயிரில் இரை சுருட்டு புழுவைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு குளோரோன்ட்றானிலிபுருள் (Chlorantraniliprole) 18.5% SC 150 மிலி அல்லது புளூபெண்டிடைம் (Flubendiamide )20% WG 125 மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தவும்.
4. இலைப் பேனைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு தையமீத்தாச்ஸம் 100 கி/ஹைக்டேர் அல்லது இமிடாகுளோபிரிட் 100 மிலி அல்லது 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளித்துக் கட்டுப்படுத்தவும்.